2015 செப்டம்பர் 2]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 205, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

205—

விளையாட்டு மைதானம்

*__56507—திருமதி எஸ். விஜயதரணி:__

மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளவங்கோடு தொகுதி, குழித்துறை நகராட்சிக்குட்பட்ட பகுதியில் புதிய விளையாட்டு மைதானம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) இராமநாதபுரம் மாவட்டம், கடலாடி வட்டம், கொண்டநல்லாம்பட்டியில், 24,000 கோடி ரூபாயில் 3,000 ஏக்கர் நிலப்பரப்பில் 4,000 மெகா வாட் அனல் மின் உற்பத்திக்குத் திட்டமிட்டு அறிவிப்பு வழங்கிய தமிழக முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு எனது சார்பிலும், எனது மாவட்ட மக்களின் சார்பிலும் மனமார்ந்த நன்றியை இப்பேரவையில் தெரிவித்துக்கொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளவங்கோடு தொகுதி, குழித்துறை நகராட்சிக்குட்பட்ட பகுதியில் புதிய விளையாட்டு மைதானம் அமைக்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில், நாகர்கோவிலுக்கு

அடுத்தபடியாக இரண்டாவது பெரிய நகரம் குழித்துறை நகராட்சியாகும். விளவங்கோடு, கிள்ளியூர், குளச்சல், பத்மநாபபுரம் சட்டமன்றத் தொகுதிகளுக்குட்பட்ட இளைஞர்கள், மாணவ, மாணவிகளின் பயிற்சிக்கும், போட்டிகளுக்கும் மார்த்தாண்டம் சுற்று வட்டாரப் பகுதிகளில் விளையாட்டு மைதானம் இல்லை. இதனால், கால்பந்து, கைப்பந்து, கூடைப்பந்து, ஓட்டம், தொடர் ஓட்டம், கபடி போன்ற விளையாட்டுகளில் பங்குபெறும் விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் மார்த்தாண்டம், குழித்துறை, களியக்காவிளை, நல்லூர், நட்டாலம், கொல்லஞ்சி போன்ற பகுதிகளில் இருப்பினும், பயிற்சிக்கும், போட்டிகள் நடத்தவும் உரிய விளையாட்டு மைதானம் உருவாக்கப்படவில்லை. உலக அரங்கில் விளையாட்டுத் துறையில் குமரி மேற்கு மாவட்ட இளைஞர்களும் ஜொலிக்க வேண்டும். அதிகப்படியான இளைஞர்கள் விளையாட்டுகளில் ஈடுபாடு உள்ளவர்களாக இருக்கிறார்கள். எனவே, அரசுத் துறை, தனியார்த் துறை, பொதுத் துறைகளில் இளைஞர்கள் விளையாட்டுத் தகுதி அடிப்படையில் பணியில் சேர, மார்த்தாண்டம் பகுதியில் தரமான விளையாட்டு மைதானம் அமைத்துத் தர அரசு முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு திட்டமிட்டுச் செயல்படுகின்ற அரசு என்பதை இங்கே நான் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன். சொன்னதைச் செய்கின்ற அரசு அம்மா அவர்களுடைய அரசு. சொல்லாததையும் செய்கின்ற அரசு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) அரசினுடைய திட்டங்கள் மக்களுக்குப் போய்ச் சேரவேண்டும், அதுவும் உடனுக்குடன் போய்ச் சேரவேண்டுமென்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு தமிழகத்தில் சிறப்பான முறையில் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது.

முற்பகல் 10-45

விளையாட்டுத் துறையில்கூட தமிழகத்தைப் பார்த்து மற்ற மாநிலங்கள் பின்பற்றுகின்ற அளவுக்கு பல்வேறு முன்னோடித்

2015 செப்டம்பர் 2]

திட்டங்களைச் செயல்படுத்துவதன்மூலம் ஓர் அருமையான சூழ்நிலையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஏற்படுத்தி வருகிறது. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியதைப்போல், மாவட்டத்தினுடைய தலைநகரங்களில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு முதலில் விளையாட்டு மைதானங்களை உருவாக்கி, அவற்றுக்கான கட்டமைப்புகள் அனைத்தையும் உருவாக்கிக்கொண்டு வருகிறது. அந்தவகையில், மாவட்டத் தலைநகரங்களில் விளையாட்டு மைதானங்களை உருவாக்கிய பின்பு, பெரிய நகரங்களிலும், பேரூராட்சிப் பகுதிகளிலும் படிப்படியாக விளையாட்டு மைதானங்களை உருவாக்குவதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழித்துறை நகராட்சிப் பகுதி ஒரு முக்கியமான பகுதி. அது கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு சிறந்த நகரம். இந்த இடத்தில் அதிகமான இளைஞர்கள், மாணவிகள் மற்றும் வீராங்கனைகள் உள்ளனர். குறிப்பாக, பெண்கள் விளையாட்டுகளில் அதிக ஆர்வம் காண்பிப்பவர்களாக உள்ளனர். பள்ளிகளில் இருந்தும் நிறைய மாணவிகள் இதிலே தேர்ச்சி பெற்று வருகிறார்கள். National Level, State Level-ல் கலந்துகொள்கிறார்கள். ஆகையால், அவர்களுக்கு உரிய மைதானம் அங்கு இருந்தால் பயிற்சிக்கும் அது போதுமானதாக இருக்கும். அதுபோல, இந்தப் பகுதியில் வாவுபலி சந்தை மைதானத்தில் தரமான விளையாட்டு மைதானம் அமைக்கலாம் அல்லது குழித்துறை வெட்டுமணி பகுதியில் மார்த்தாண்டம் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் உள்ள மைதானத்தை மேம்படுத்தி கால்பந்து, கைப்பந்து, இறகுப்பந்து, பூப்பந்து, கூடைப்பந்து மைதானங்கள், side track மற்றும் உள் விளையாட்டு அரங்கங்களை அமைக்க வசதியான இடம் உள்ளது. எனவே, இடத்தையும் நாங்கள் தேர்வுசெய்து கொடுத்திருக்கிறோம். தயவுசெய்து, அதை நீங்கள் கனிவுடன் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளவங்கோடு தொகுதியில் பைக்கா திட்டத்தின்மூலம் மேல்பாலை புனித மரியன்னை மேல்நிலைப் பள்ளியிலும், பாலவிளை அரசு தொடக்கப் பள்ளியிலும் சிறப்பான முறையில் விளையாட்டு உபகரணங்கள் வழங்கி, அங்கே வைப்பு அறைகள் கட்டப்பட்டிருக்கின்றன. விளவங்கோடு தொகுதிக்குட்பட்ட கொல்லஞ்சி, நட்டாலம், விளாத்துறை, தேவிகோடு, மலையடி, மாங்கோடு, மஞ்சாலுமூடு, மருதங்கோடு, முழுக்கோடு, புலியூர்சாலை, வள்ளியூர், வெள்ளங்கோடு மற்றும் விளவங்கோடு போன்ற 11-க்கும் மேற்பட்ட ஊராட்சிகளில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் 2013-2014 ஆம் நிதியாண்டிலும், 2014-2015 ஆம் நிதியாண்டிலும் ஒவ்வோர் ஊராட்சிக்கும் தலா ரூ.20,000/- கொடுக்கப்பட்டு, சிறப்பான முறையில் கிராம விளையாட்டு மைதானங்கள் தொடங்கப்பட்டுள்ளன. ஆகவே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் மற்ற நகரங்களுக்கும் இதுபோன்ற விளையாட்டு மைதானங்களை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் சுட்டிக்காட்டியதுபோல், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மூலமாக இடம் தேர்வு செய்யப்பட்டு, விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தோடு புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்பட்டால், துறை ரீதியாக ஆய்வு செய்து, விளையாட்டிற்கு முக்கியத்துவம் கொடுத்து, நடவடிக்கை எடுக்கப்படும், கட்டமைப்புகள் உருவாக்கித் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 206, மாண்புமிகு உறுப்பினர் திருமதி மனோரஞ்சிதம், மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

206—

மாணவர் விடுதி

***53571—திருமதி மனோரஞ்சிதம்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—